

# சீறத்துன்னபி ﷺ

## நாள் 1

# இன்றைய தலைப்புகள்

அறிமுகம்

நபி (ஸல்) அவர்களை புகழ்ந்து கூறப்பட்டுள்ள
சில குர்ஆன் வசனங்கள்

நபி (ஸல்) அவர்களின் தனிச்சிறப்பு

மனிதகுலம் புகழும் மாமனிதர் நபி (ஸல்)

# அறிமுகம்:

‘முஹம்மது’ என்ற பெயர் அல்குர்ஆனில் நான்கு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸூரா ஆல இம்ரான் (3:144), ஸூரா அஹ்ஜாப் (33:40), ஸூரா முஹம்மது(ஸல்) (47:2), ஸூரா ஃபத்ஹ் (48:29). ‘அஹமது’ என்ற பெயர் (நபிகளாரின் மற்றொரு பெயர்) அல்குர்ஆனில் ஓர் இடத்தில் ஸூரா ஸஃப்ஃபுவில் (61:6), அதுவும் நபி ஈஸா (அலை) அவர்களின் வாய்மொழியாக வந்துள்ளது. ‘முஹம்மது’ மற்றும் ‘அஹமது’ என்ற வார்த்தைகள் ‘ஹம்து’ என்ற மூல வார்த்தையிலிருந்து வந்தது. ‘ஹம்து’ என்றால் ‘புகழ்’ என்று பொருள்.



இவ்வுலகில் ஒரு நொடி கூட தவறாமல் பல கோடி மக்கள் கண்மணி நாயகம் (ஸல்) அவர்களின் புகழ் கூறாமல் இருப்பதில்லை. நாம் ஷஹாதத் கலிமா ‘லாஇலாஹா இல்லல்லாஹ் முகம்மது ரசூலுல்லாஹ்’ என்று கூறும்போதும், அதான் (பாங்கு) ஒலிக்கும்போது ‘அஸ்ஹது அன்ன முஹம்மதுர் ரஸூலல்லாஹ்’ என்றும், ஒவ்வொரு தொழுகையிலும் அத்தஹியாத் லில்லாஹி வஸ்ஸலவது என்ற தஷாஹூத்திலும், அதன்பின் கூறும் ஸலவாத்தும், நபி (ஸல்) அவர்களின் புகழை ஒலிக்கச்செய்கிறது. அல்லாஹ் நபிகளாரின் அந்தஸ்தை இவ்வாறாக உயர்த்தியுள்ளான்.

நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் (சீறா) மூலம் அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள பல சம்பவங்களை நாம் புரிந்துகொள்ளலாம். அதேபோல் அல்குர்ஆனும், நபிகளாரின் வாழ்க்கை குறிப்புகளை பல இடங்களில் விளக்குகிறது. இவ்வாறாக அல்குர்ஆனும், நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளது. நபி (ஸல்) அவர்களின்

வாழ்க்கை வரலாற்றை புரிந்து, விளங்கிக்கொள்வது நமக்கு கடமை மட்டுமல்ல, அது நமக்கு மிகப்பெரிய உத்வேகத்தைக் கொடுக்கும் சிறந்த வழிகாட்டியாகும்.

## நபி (ஸல்) அவர்களை புகழ்ந்து கூறப்பட்டுள்ள சில குர்ஆன் வசனங்கள்:

நபி (ஸல்) அவர்களை அல்லாஹ் தனது திருமறையில் புகழ்ந்ததைப் போல் வேறு யாராலும் புகழ முடியாது என்பதை கீழ்வரும் அல்லாஹ்வின் வார்த்தைகள் நிரூபிக்கிறது.

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதரிடம் ஓர் அழகிய முன்மாதிரி உங்களுக்கு இருக்கிறது. – ஸூரா அஹ்ஜாப் (33:21)

நாம் உமக்காக உம்முடைய புகழை மேலோங்கச் செய்தோம். – ஸூரா அலம் நஷ்ரஹ் (94:4)

(நபியே!) நிச்சயமாக நீர் மிக உயர்ந்த மகத்தான நற்குணம் உடையவராக இருக்கின்றீர். – ஸூரா அல்கலம் (68:4)

(நபியே!) நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ரஹ்மத்தாக, ஓர் அருட்கொடையாகவே அனுப்பியுள்ளோம். – ஸூரா அல்அன்பியா (21:107)

நபி (ஸல்) அவர்கள் தங்கள் உம்மத்துகளிடம் கொண்டுள்ள கரிசனத்தை அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

(முஃமின்களே!) நிச்சயமாக உங்களிலிருந்தே ஒரு தூதர் உங்களிடம் வந்திருக்கின்றார். நீங்கள் துன்பத்திற்குள்ளாகி விட்டால், அது அவருக்கு மிக்க வருத்தத்தைக் கொடுக்கின்றது. அன்றி, உங்கள் நன்மைகளையே அவர் பெரிதும் விரும்புகிறார். இன்னும் முஃமின்கள் மீது மிக்க கருணையும் கிருபையும் உடையவராக இருக்கின்றார். – ஸூரா அத்தவ்பா (9:128)

நபி (ஸல்) அவர்களின் மகத்துவத்தை எடுத்துரைக்க அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

(நபியே!) நீர் கூறும்: ''நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்களானால், என்னைப் பின்பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான்; உங்கள் பாவங்களை உங்களுக்காக மன்னிப்பான்; மேலும், அல்லாஹ் மன்னிப்பவனாகவும், மிக்க

கருணை உடையவனாகவும் இருக்கின்றான். – ஸூரா ஆல இம்ரான் (3:31)

நபி (ஸல்) அவர்களின் மிக உயர்ந்த மகத்துவத்தை எடுத்துரைக்க அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: ''இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே! நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்''. – ஸூரா அஹ்ஜாப் (33:56)

## நபி (ஸல்) அவர்களின் தனிச்சிறப்பு:

- நபி (ஸல்) அவர்கள் இறுதி நபி ஆவார்கள். அதைப்பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: ''முஹம்மது (ஸல்) உங்கள் ஆடவர்களில் எவர் ஒருவருக்கும் தந்தையாக இருக்கவில்லை; ஆனால் அவரோ அல்லாஹ்வின் தூதராகவும், நபிமார்களுக்கெல்லாம் இறுதித் தூதராகவும் இருக்கின்றார். மேலும் அல்லாஹ் எல்லாப் பொருள்கள் பற்றியும் நன்கறிந்தவன்''. – ஸூரா அஹ்ஜாப் (33:40)

- நபி (ஸல்) அவர்கள் மட்டுமே ஜின்கள் உட்பட உலக மக்கள் அனைவருக்கும் நபியாக வந்தவர்கள். மற்ற நபிமார்கள் அனைவரும் அந்தந்த பிரதேசம் அல்லது நாடுகளுக்கு மட்டுமே அனுப்பப்பட்டனர்.

- மற்ற நபிகளுடன் ஒப்பிடும்போது, நமது நபி (ஸல்) அவர்களுக்கு மட்டுமே மிக அதிகமான எண்ணிக்கையில், அவர்களை பின்பற்றும் மக்கள் (உம்மத்துகள்) இருக்கிறார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''அல்லாஹ் எனக்கு ஓர் உம்மத்தின் கூட்டத்தைக் காட்டினான். அவர்கள் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை இருந்தார்கள். இவர்கள் என் உம்மத்தாக இருக்கும் என நான் கூறினேன். அதற்கு 'இவர்கள் நபி மூஸா (அலை) அவர்களின் உம்மத்துகள்' என பதில் கிடைத்தது''. – புகாரீ

- அதன்பின்பு அதைவிட அதிகமானோர் கொண்ட, அடிவானத்தை விட பெரிதான, அவர்கள் பார்வையை விஞ்சிய உம்மத்தின் கூட்டத்தைக் கண்டார்கள். அவர்கள் நபி (ஸல்) அவர்களின் உம்மத்துகள் என கூறப்பட்டது.

- மற்றொரு ஹதீஸில் நபி (ஸல்) கூறினார்கள்: ''சொர்க்கத்தில் இருக்கும் மக்களில் மூன்றில் இரண்டு பகுதி மக்கள் என் உம்மத்தாக இருப்பார்கள்''.

- நபி (ஸல்) அவர்களுக்கு மிக உயர்ந்த அற்புதம் கொடுக்கப்பட்டது. அது அல்குர்ஆன் ஆகும்.



- மற்ற நபிமார்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள் எல்லாம் வரலாற்றில் உள்ளது. ஆனால் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட அல்குர்ஆன் என்னும் அற்புதம் காலத்தால் அழியாத, எல்லா மக்களும் படித்து பயன்பெறும் வகையில் உலக இறுதி நாள் வரை இருக்கும்.

- அல்இஸ்ரா மற்றும் மிஃஹ்ராஜ் என்ற பிரபஞ்சப் பயணம், நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட மற்றொரு அற்புதம். இவர்கள் மட்டுமே அல்லாஹ்வால் வானத்திற்கு அழைக்கப்பட்ட ஒரே மனிதர்.

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘நான் ஆதமுடைய மக்களுக்குத் தலைவன்’’ – புகாரீ, முஸ்லிம். இதன் விளக்கம், நபியவர்கள் உலக மக்கள் அனைவருக்கும் தலைவர்; மற்றும் அவர்களே மறுமை நாளில் எல்லா மக்களின் தலைவராக இருப்பார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் மறுமை நாளில் முதலில் எழுப்படுவார்கள் – புகாரீ

- நபி (ஸல்) அவர்கள் மறுமையில் ஸிராத்துல் முஸ்தகீன் பாலத்தை கடக்கும் முதல் நபர் ஆவார்கள். மறுமை நாளில் ஒவ்வொரு மனிதரும் இப்பாலத்தைக் கடந்தால்தான் சுவர்க்கம் செல்லமுடியும். இதைக் கடக்க முடியாமல் கீழே விழுபவர்கள் நரகத்துக்கு செல்வர். மக்கள் செய்யும் நற்காரியங்களைப் பொறுத்தே இப்பாலத்தைக் கடக்க முடியும்.

- நபி (ஸல்) அவர்களுக்கு ‘கவ்ஸர்’ என்ற சதுர வடிவிலான தடாகத்தை அல்லாஹ் கொடுத்திருக்கின்றான். – (அல்குர்ஆன் 108:1). இது சுவர்க்கதில் இருக்கும் முதன்மையான ஆறு. இதிலிருந்துதான் மற்ற ஆறுகள் பிரிகின்றது.

- இதன்மூலம் சுவர்க்கதில் உள்ள அனைவரும் நபி (ஸல்) அவர்களின் தடாகத்திலிருந்து வரும் நீரைத்தான் பருகுவார்கள் என அறியமுடிகிறது.

- ஆதம் (அலை) சுவர்க்கத்தை விட்டு வெளியே வந்தபின், முதன்முதலாக சுவர்க்கத்தில் நுழையும் நபராக நபி (ஸல்) அவர்கள் இருக்கிறார்கள்.

- நபி (ஸல்) அவர்களுக்கு 'ஜன்னத்துல் பிர்தௌஸ்' என்ற உயர்த்த சொர்க்கத்தை வழங்கியுள்ளான். இது அல்லாஹ்வின் அர்ஷின் கீழ் உள்ளது. இது 'அல்ஃபத்ஹிலா' என்றும் அழைக்கப்படும்.

- இவ்வளவு சிறப்புகளையும் அல்லாஹ் ஒருவருக்கே வழங்கியுள்ளான். அது நமது நாயகம் கண்மணி (ஸல்) அவர்களே.

## மனிதகுலம் புகழும் மாமனிதர் நபி (ஸல்):

- பின்வரும் நிகழ்வு புகாரீ ஹதீஸில் உள்ளது.

- மறுமை நாளில் நம்பிக்கையாளர்கள் ஒன்று கூடி, ''நமக்கு ஏற்பட்டுள்ள துன்பங்களிலிருந்து நம்மைக் காக்கும்படி யார் மூலமாவது நம் இறைவனிடம் மன்றாடினால் எவ்வளவு நன்றாயிருக்கும்!'' என்று பேசிக்கொள்வார்கள்.



- அவர்கள் ஒன்றுகூடி, ''இதை யாரிடமாவது எடுத்துச் செல்லலாம்'' என கூறிக்கொள்வார்கள்.

- பிறகு, அவர்கள் ஆதம் (அலை) அவர்களிடம் வந்து, ''அல்லாஹ், தன் கையால் உங்களைப் படைத்தான். அவனே உங்களுக்கு ரூஹை ஊதினான். தன்னுடைய வானவர்களை உங்களுக்குச் சிரம் பணியச் செய்தான். எனவே, இந்தச் சோதனையான கட்டத்திலிருந்து எங்களை விடுவிப்பதற்காக

உங்களுடைய இறைவனிடத்தில் எங்களுக்காகப் பரிந்துரை செய்யுங்கள்'' என்று சொல்வார்கள்.

- அதற்கு ஆதம் (அலை) அவர்கள், ''அந்த நிலையில் நான் இல்லை'' என்று கூறிவிட்டு, தான் தடுக்கப்பட்ட மரத்திலிருந்து புசித்த அந்த பாவத்தை நினைத்துப் பார்த்து வெட்கப்பட்டு, வேறுயாரிடமாவது செல்லுமாறு கூறிவிடுவார்கள்.

- பின்பு அம்மக்கள், (நபி) நூஹ் அவர்களிடம் செல்வார்கள். அவர்தான் பூமியிலுள்ளவர்களுக்கு அல்லாஹ் அனுப்பிவைத்த முக்கிய தூதர்களில் (ரசூல்மார்கள்) முதலாமவர் ஆவார்.

- நூஹ் (அலை) அவர்கள், ''நீங்கள் நினைக்கும் அந்த நிலையில் நான் இல்லை'' என்று கூறிவிட்டு, தாம் அறியாத ஒன்றைக் குறித்துத் தம் இறைவனிடத்தில் கேட்டதை, அதாவது அல்லாஹ் யாரையும் காப்பாற்ற கேட்கக்கூடாது என சொல்லியிருந்தும், தன் மகனை வெள்ளத்திலிருந்து காக்குமாறு அல்லாஹ்விடம் கேட்டதை நினைத்து வெட்கப்படுவார்கள். பின்பு வேறுயாரிடமாவது செல்லுமாறு கூறிவிடுவார்கள்.

- அதன்பின்பு, நம்பிக்கையாளர்கள் இப்ராஹீம் (அலை) அவர்களிடம் செல்வார்கள். அப்போது அவர்களும், ''நீங்கள் நினைக்கும் அந்த நிலையில் நான் இல்லை'' என் கூறிவிட்டு தான் கூறிய மூன்று பொய்களை நினைத்து வருத்தப்பட்டவர்களாக வேறுயாரிடமாவது செல்லுமாறு கூறிவிடுவார்கள்.

- இப்ராஹீம் (அலை) அவர்கள் கூறிய பொய்களை, பொய்யாக கருத முடியாது. சிலைகளை உடைத்துவிட்டு பெரிய சிலைதான் மற்ற சிலைகளை உடைத்தது என கூறியது அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காக. இணை வைக்கும் திருவிழாவிற்கு மக்கள் அழைத்தபோது தான் நோயுற்றியிருப்பதாக கூறி அதில் கலந்து கொள்ளாமல் தவிர்த்தது; உண்மையில் அம்மக்களின் செயலால் வருத்தமாக உணர்ந்தார். கொடுங்கோல் மன்னனிடமிருந்து தன் மனைவி சாரா அம்மையாரை பாதுகாக்க, அவரை சகோதரி என கூறியது; அதன்மூலம் அவரை இஸ்லாத்தில் சகோதரியாக்கியது.

- பின்பு நம்பிக்கையாளர்கள் அல்லாஹ் உரையாடிய, தவ்ராத்தையும் வழங்கிய அடியாரான மூஸா (அலை) அவர்களிடம் செல்வார்கள். அப்போது அவர்களும், ''நீங்கள் நினைக்கும் அந்த நிலையில் நான் இல்லை'' என்று கூறிவிட்டு, தம் வாழ்நாளில் ஒருமுறை ஒரு மனித உயிரைக் கொன்றதை

நினைவு கூர்ந்து தம் இறைவனுக்கு முன் வெட்கப்படுவார்கள். அந்த கொலை அல்லாஹ்வின் நாட்டப்படி எதேச்சையாக நிகழ்ந்தது.

- பின்பு நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்வுடைய தூதரான, நபி ஈஸா (அலை) அவர்களிடம் செல்வார்கள். அவர்களும், ''நீங்கள் நினைக்கும் அந்த நிலையில் நான் இல்லை'' என கூறிவிடுவார்கள்.

- இறுதியாக, அனைத்து மக்களும், முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட அடியாரான முஹம்மத் (ஸல்) அவர்களிடம் வந்து முறையிடுவார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''நான் அல்லாஹ்விடம் மண்டியிட்டு கேட்கிறேன்; அது என் பொறுப்பு'' என கூறுவார்கள்.

- முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்கள் அனைவரும் நபி (ஸல்) அவர்களைப் புகழ்வார்கள். இவ்வாறாக நபியவர்கள் 'மகாமுல் மஹ்மூத்' என்ற 'புகழின் இருப்பிடமாக' உயர்வார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் இறைவனை காணும் போது சஜ்தாவில் விழுந்து விடுவார்கள். அல்லாஹ் தான் விரும்பிய வரையில் அப்படியே அவர்களை விட்டு விடுவான். பிறகு, இறைவனின் தரப்பிலிருந்து, ''உங்கள் தலையை உயர்த்துங்கள்! கேளுங்கள்! உங்களுக்குத் தரப்படும். சொல்லுங்கள்! செவியேற்கப்படும். பரிந்துரை செய்யுங்கள்! உங்கள் பரிந்துரை ஏற்கப்படும்'' என்று சொல்லப்படும்.

- அப்போது அவர்கள் தனது தலையை உயர்த்தி, இறைவனை புகழ்ந்து, பிறகு பரிந்துரை செய்வார்கள். குர்ஆன் தடுத்துவிட்ட, நிரந்தர நரகம் கட்டாயமாகி விட்டவர்களான இறைமறுப்பாளர்கள், நயவஞ்சகர்களைத் தவிர வேறு யாரும் நரகத்தில் இல்லை என்ற நிலை வரும்வரை தனது பரிந்துரை மூலம் மக்களை சொர்க்கத்திற்கு அனுப்ப காரணமாக இருப்பார்கள்.

- இதை அல்லாஹ் தன் திருமறையில் அந்நஹ்ல் (16:27-29) ஸூராவில் கூறுகிறான்: காஃபிர்களை இழிவுபடுத்தும் விதமாக அவர்கள் இணைவைத்து வணங்கிய தெய்வங்கள் எங்கே என கேட்பான். அவர்கள் நரகத்தில் என்றென்றும் தங்கியிருப்பார்கள்; ஆணவங்கொண்டு பெருமையடித்துக் கொண்டிருந்த இவர்களின் தங்குமிடம் மிகவும் கெட்டது'' என கூறப்படும்.